சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No.OS.210/2019**

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமலிங்கம் | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | பூவாத்த கவுண்டர் | ஜாதி | |
| கிராமம் | அத்தியூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 60 |

**27.10.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 14.07.1999 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த இராமசாமி பெயரில் உள்ள யுடிஆர் பட்டா அசல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி பட்டா எண்.772க்கு செலுத்திய தீர்வு ரசீதுகள்-3 **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துகளுக்கான அடங்கல் நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.